பக்கங்கள்: 8 விலை ரூபா: 10.00

சங்கமம்
SANGAMAM

"அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே உலகு"

கூட்டுறவுக் குரல் Voice of Co-op

ஆறு 2 திருவள்ளுவர் ஆண்டு 2029 ஜனவரி 1999 அருவி 5

வான் தாக்குதலினால் வன்னியில் வாழ்விடங்களை இழந்துள்ள மீனவர்கள்

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கண்டனம்

கடல்வலயத் தடைச்சட்டம் அப்பாவிமக்கள் மீதான கடற் படையினரின் தாக்குதல்கள் போன்றவற்றால் சொல்லமுடி யாதளவு துயரத்தை அனுப விக்து வரும் அப்பாவி தொழி லாளர்கள் மீது மேற்கொள் ளப்பட்ட கிபீர் குண்டு வீச்சு நடவடிக்கை மனிதாபிமான மற்றதும் கோழைத்தனமான தும் ஆகும் என முல்லைத் தீவு கடற்றொழிலாளர் கூட் டுறவுச் சங்கங்களின் தலைவர் திரு இரவிசரன் தெரிவித்துள் ளார்.

கடந்த வாரம் முல்லைத் தீவு வண்ணாங்குளம் மீனவர் குடியிருப்பு மீது மேற்கொள் ளப்பட்ட கிபீர் குண்டுத்தாக் குதலைக் கண்டித்து வெளி யிடப்பட்ட அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கும் போது கடல் வலயத் தடைச் சட்டத்தைப் போட்டுள்ள அரசு மீனவர்களுக்கு உரிய நிவாரணத்தை மறுத்து வரு கிறது இந்நிலையில் அவர்கள் உயிரைப் பணயம் வைத்தே கடல் தொழிலில் வயிற்றுப் பிழைப்புக்காக ஈடுபடுகின்ற னர். இந்நிலையில் அவர்கள் குடியிருப்புக்கள் மீதும் குண்டு வீசுவது கோழைத்தனமான தும் மனிதாபிமானமற்றது மான செயலாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

(அ-கு)

வன்னி மாவட்டத்திற்கு புதிய மறைக் கோட்டம்

யாழ். ஆயரிடம் வேண்டுகை

வன்னி மாவட்டத்திற்கு புதிய மறைக் கோட்டத்தை உருவாக்கி தரும்படி யாழ் ஆயரிடம் வேண்டுகோள்விடுக் கப்பட்டுள்ளது

வன்னி மீட்புப் பணி மகா நாட்டில் இப்பிரேர ணையை வன்னி வாழ் கத் தோலிக்க மக்கள் முன் வைத் தார்கள்.

ஐக்கிய நாடுகள் சபை செய லாளருக்கு வன்னி மக்களின் துன்பங்கள் பற்றி மகஜரும் மாவீரர் தினங்களில் சிறப்பு திருப்பலிகளை கத்தோலிக்க தேவாலயங்களில் நடாத்தவே ண்டுமென்ற பிரேரணைகளும் முன் வைக்கப்பட்டன

அண்மையில் யாழ் மறை மாவட்டத்தில் நான்கு நாட்க

புதிய சுகாதார வைத்திய அதிகாரி

கிளிநொச்சி மாவட்டத்தின் புதிய சுகாதார வைத்திய அதிகாரியாக திரு காசிலிங் கம் சுஜந்தன் பதவி ஏற்றுள் ளார்

மாணவர் தலைமைத்துவப் பயிற்சி

கிளி மத்திய கல்லூரி மற் றும் அயற்பாடசாலைகளின் மாணவ முதல்வர்களுக்கான தலைமைத்துவப்பயிற்சி நெறி ஒன்று 19-01-99 அன்றுமத்திய கல்லூரி மண்டபத்தில் நடை பெற்றது இப்பயிற்சி நெறி யில் தலைமைத்துவப் பண்பு கள் தொடர்பாக கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு சூ. சிறில் அவர்களும் மாண வர்களைச் சமூகமயப்படுத்து வதில் பொது நிறுவனங்களின் பங்கு பற்றி வெகுஜன ஒன்றி யத்தின் தலைவர் திரு பொன் வினாயகமூர்த்தி அவர்களும் சாரணியப்பணிபுகள் பற்றி உதவிக்கல்விப்பணிப்பாளர் பொன் தில்லை நாதன் அவர் களும் நிறுவனக்குறிக்கோளை அடைவதில் தலைமைத்துவத் தின் பங்களிப்பு பற்றி விசேட ஆணையாளர் திரு பத்ம நாதன் அவர்களும் கிராமிய தலைமைத்துவத்தில் கிராம சேவையாளர்கள் எனும் விட யம் பற்றி திரு. மகேந்திரன் அவர்களும் நிறுவனங்களின் வளர்ச்சியில் முகாமைத்துவம் எனும் தலைப்பில் அதிபர் திரு வி. சிற்றம்பலம் அவர் களும் உரையாற்றினர்

கிளி/தெல்லிப்பளை ப. நோ. கூ. ச தலைவரின் பிள்ளைகளின் மறைவிற்கு இரங்கல் தெரிவிப்பு

கிளி கூட்டுறவு அபிவிருத்தி அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற தலைவர்களின் பொதுமுகாமையாளர்கள் பங்கு பற்றிய மகாநாட்டில் தெல்லிப்பளை ப.நோ.கூ.சங் கூட்டுறவுச் சங்க தலைவர் இரா.சாம்பசிவம் அவர்களின் இரு பிள்ளைகளின் சாவுக்கு சபையால் ஆழ்ந்த அனு தாபம் தெரிவிக்கப்பட்டது

தலைவர் இரா. சாம்பசிவம் அவர்களின் புதல்வன் அருட் செல்வன் (25) அண்மையில் கிபீர் விமான குண்டு வீச்சில் கொல்லப்பட்டதும் அவரது பிரிவைத்தாங்க முடியாத அவரது சகோதரி அருள் மொழி (26) மாரடைப்பால் காலமானதும் தெரிந்ததே

கிளி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் நா. முருகேச தலைமையில் இரு பிள்ளைக ளின் சாவுக்கு இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது.

தொடர்ந்து கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையாளர் நா. முருகேசு. ஒன்றியத்தலை வர் சூ சிறில் கரைச்சிஇழக்கு பொதுமுகாமையாளர் சி புவ னேஸ்வரன், கூட்டுறவு அலு வலர் எஸ் சபாரத்தினம், சங் கமம் பிரதம ஆசிரியர் ஆகி யோர் தங்கள் இரங்கலுரை களை நிகழ்த்தினார்கள்.

இவ்வேளை மகாநாட்டில் வீற்றிருந்த தலைவர் இரா சாம்பசிவம் அவர்களுக்கு அனைவரும் ஆறுதல் கூறினர்.கூட்டுறவுச்சபை மூலம் விரி

கிளி/கூட்டுறவு ஒன்றியம் முகவர் அந்தஸ்து பெற்றுள்ளது

கிளிமாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்திற்கு உரக கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாப னம் என்பவற்றிடமிருந்து கிளி அரச அதிபரின் பெரும் முயற் சியில் முகவர் அந்தஸ்து கிடைத்துள்ளது கற்போது முதற்கட்டமாக 87 சுமை உரம் கொண்டுவரப்பட்டு கூட் டுறவுச் சங்கங்களுடாக விவ சாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது இதன்மூலம் எதிர் காலத்தில் உரம், கிருமிநாசினி போன்றவற்றிற்கு தட்டுப்பாடு ஏற்படாது என எதிர்பார்க் கப்படுகிறது.

யாழ் தெல்லிப்பளை ப நோ. கூ சங்கம் கூட்டுறவுக்கோர் அறிமுகம் நூல் வெளியீடு

யாழ்- தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தின் வெளியீடான 'கூட்டுற விற்கோர் அறிமுகம்' என்ற நூல் வெளியீட்டு விழா தை மாதம் 15ம் திகதி (பொங்கல் தினத்தன்று) மாலை கொழு பு தமிழ்ச்சங்க மண்டபத் தில் நடைபெற்றது.

மேற்படி கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. ரி. சிவமகா ராஜா தலைமையில் நடை பெற்ற இவ் விழாவில் கூட்டு றவு ஆணையாளரும், பதிவா ளருமான திரு பி.ஏ.ரஞ்சித்த இலங்கை தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர், தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசி ரியர் திரு ரீ, சிவனேச செல் வன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவை பணிப்பாளர் திரு நா, மதிய முகன் உட்பட பலர் வாழ்த் துரை வழங்கினர்.

கூட்டுறவுக் கல்வியை வளர் க்கும் பாரிய நோக்கைக் கொண்ட இந்நூல் 318 பக்கங்களை உள்ளடக்கியது என தெரியவருகின்றது.

இந் நூல் யாழ்- மண்ணில் வைத்து வெளியிடப்படா தமையிட்டு கூட்டுறவாளர் கள் மத்தியில் அதிருப்தி நில வுகின்றது. (V.K. காந்தன்)

கூட்டுறவு பயிலரங்கு

கிளிநொச்சி மாவட்ட கூட் டுறவுச்சபை மற்றும் கல்வித் திணைக்களம் என்பவற்றின் ஏற்பாட்டில் பாடசாலை ஆசிரியர்களுக்கானபயிலரங்கு ஒன்று 29-12-98 மாவட்டக் கூட்டுறவுக்கல்லூரியில் நடை பெற்றது

பாடசாலைக் கூட்டுறவின் அவசியம் பற்றி திரு. அன்ரன் அன்பழகன் பாடசாலைக் கூட்டுறவுச்சங்கங்களின் நடை முறைகளும் செயற்பாடுகளும் பற்றி கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு பத் மானந்தன் அவர்களும் விரி வுரை நிகழ்த்தினர் பாட சாலைக் கூட்டுறவுச் சங்க துணைவிதிகள் கிளிமாவட்டக் கூட்டுறவுச்சபை மூலம் விரை வில் வெளியிடப்படுவதாக செய லாளர் திரு க. வெகுமார் தெரிவித்துள்ளார்.

10 குளங்கள் புனரமைப்பு

அவசர மனித நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் கிளி.மாவட்ட த்தில் 10குளங்களைபுனரமைப் பதற்கு திட்டங்கள்சமர்ப்பிக்க உள்ளூர் அரசசார்பற்ற நிறுவ னங்களாக பூநகரி அபிவிருத் திப் புனர்வாழ்வுக் கழகமும், அக்கராயன் அபிவிருத்திபுனர் வாழ்வுக் கழகமும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமாக சர்வதேச செஞ்சிலுவைச்சங் கமும் தெரிவு செய்யப்பட் டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1999 ம் ஆண்டினை அரசு சார் தொண்டர் நிறுவனங்கள் சிறுவர் பாதுகாப்பு ஆண்டாகப் பிரகடனப் படுத்தியிருப்பது வரவேற்கக்கூடிய தான ஒரு நல்ல அம்சமாகும் இது பெரும்பாலான பிரகடனங்களைப் போல் சடுப்பு வெளிவை அறிக்கை யாக மட்டும் இருக்கக்கூடாது என மனம் விரும்புகிறது. ஏனெனில் சிறி லங்காவின் தென்பகுதியிலேயே சிசு மற்றும் சிறுவர் மரண விகிதம் குறைந்து சிறுவர்கள் உயிர் பிழைத் திருக்கிறபோதும் 36.4 வீதமானோர் போசாகுன்மையினால் மிக மோச மாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என அரசு சார்பான புள்ளி விபரங்களே தெரிவிக்கின்றன.

சரிவேதேசத்தின் கண்களை செய் தித்தடை எழுத் திரையினால் மூடி விட்டு அப்பாவி மக்கள் மீது கட்ட விழ்த்து விட்டுள்ள அரச பயங்கர வாதப் படுகொலைகள் பொருளா தாரத்தடை, மருத்துவ வசதித்தடை என்பவற்றால் முடமாக்கப்பட்ட மக்கள் வாழும் வன்னிப் ப்ரதியில் ஏற்கனவே போசாகுன்மை பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதை நிரம்பி வழியும் வைத்தியசாலைகளும் அணையாது கண்று கொண்டிருக் கும் எமது பகுதி மயானங்களும் இரு காடுகளும் சாட்சியம் பகர்ந்துகொண் டிருகின்றன

போசாக்கு விழிப்புணர்வு

(Food Security is Often Seve-rely threated Causing increased risk of malnutrition disease and death; Emergency health workers have responsibility to try to cure malnu-trition, prevent malnutrition, pro-mote adequate food to healthy exis-tence)

வளங்களுவி தலையாய வளமான மனிதவளத்தின் உச்சப்பயன்பாட் டைப் பெறுவதற்கு முதலில் ஒவ் வொரு மனிதனும் நல்லாரோக்கியத் துடன் கூடி காதிதிரமானவனாக இருந்தால் மட்டுமே அவன் தனக்கும் சமூகத்திற்கும் பயனுடையவனாக இருப்பான் இதனைப் பேணுவது தேசத்தின் முக்கிய கடமைகளுள் ஒன்றாகும் போசாக்குணவு தொற்று நோய்த்தடுப்பு சுத்தமான குடி நீர்

> வீட்டிலும் வீட்டயலிலும் கிடைக் கின்ற வளங்களைக் கொண்டு செலவுகுறைந்த நிறையுணவைத் தயாரிக்கவும் உணவைப் பாது காக்கும் முறைகளை அறிந்திருக் கவும் உரிய அடிப்படை அறிவும், விழிப்புணர்வும் கிராமிய மட்ட தில் லேய ஏற்படுத்தப்பட வேண்டும் உண்மையிலேயே சமூக மேம்பாடு என்பது உயர்ந்த சிந்தனை எளி மையான வாழ்க்கை முறை (High Thinking and Simpie Living) மூலம் ஏற்படுத்த முடியும் என் பது ஒவ்வொருவரையும் உணர வைக்கப்பட வேண்டும்.

பாதுகாப்பு வாழ்விடம் என்பவற்றை ஒவ்வொரு தனிமனிதனும் பெற கிறான் என்பது உறுதிப்படுத்தவேண் டியது அரசினதும். சமூகப்பொறுப் புடைய நிறுவனங்களினதும் கடப் பாடாகும் கொடூரம் நிறைந்த யுத் தத்தினால் துரத்தப்பட்டு அகதி நிலையில் வாழும் எம்மவர்க்கு அர சினால் புறக்கணிக்கப்பட்ட இந்நிலை யில் சமூகப் பொறுப்புடைய நிறுவ னங்கள் மீது இரட்டிப்பான பொறுப் புச் சுமத்தப்பட்டுளது

உள்ளூரில் கிடைக்கும் சத்து மிக்க பல்வேறு வகையான உணவுப் பொருட்களைத் தேர்ந்தெடுத்து போசாக்குப் பிறமான அடிப்பட யில் உரிய பெறுமானங்கள் கிடைக் கும் வகையில் திட்டமிட்டு உணவை உட்கொள்ளும் முறையே போசாக்குணவு திட்டமாகும் குறிப் பாக குழந்தைகள் பள்ளி செல்லும் பிள்ளைகள் இளைஞர்கள் பாலூட் டும் தாய்மார், கர்ப்பவதிகள் என் போருடைய விடயத்தில் கூடிய கவ னம் எடுக்கப்பட வேண்டும். இதற்கு சுகாதாரத் திணைக்களம் கல்வித் திணைக்களம் என்பன வேலைத்திட் டிட்டங்களைக் கொண்டிருந்த போதும் போசாக்குப் பற்றிய விழிப் புணர்வு பற்றிய அறிவூட்டல் தேவையை ஈடு செய்வதற்கு இன்னும் இன்னும் அதிக செயல்திட்டங்களை சமூகம் வேண்டி நிற்கிறது இன்றைய நுகர்வுக் கலாச்சாரத்தின் கீழ் விளம் பரம் செய்யப்படும் உணவுப்பொருட் கள் எல்லாமே சத்துமிக்கவை அல்ல எனபதையும் பணத்திற்கேற்ப பெறு மதியுடையவையல்ல என்பதனையும் தானியங்கள், பருப்புவகை, முட்டை, பால், கீரை வகைகள், பப்பாளி, வாழைப்பழங்கள் போன்ற எமது சூழ லில் மலிவாகவும் எளிதாகவும்கிடைக் கின்றவற்றை தினமும் உபயோகித் தும்பழக்கத்தையும் ஏற்படுத்துதலே மிகுந்த பயன் அளிக்கும் என்பதை உணரவைக்க வேண்டும்.

வீட்டிலும், வீட்டயலிலும்கிடைக் கின்ற வளங்களைக்கொண்டு செலவு குறைந்த நிறையுணவை தயாரிக்கவும் உணவை பாதுகாக்கும் முறைகளை அறிந்திருக்கவும் உரிய அடிப்படை அறிவும், விழிப்புணர்வும்கிராமிய மட் டத்திலேயே ஏற்படுத்தப்பட வேண் டும் உண்மையிலேயே சமூகமேம்பாடு என்பது உயர்ந்த சிந்தனை, எளிமை யான வாழ்க்கை முறை (High Thin king and Simple Living) மூலம் ஏற்ப டுத்த முடியும் எனபது ஒவ்வொரு வரையும் உணர வைக்கப்படவேண் டும்.

இந்த நோக்கில் கடந்த மாதம் கிளி. மாவட்ட கூட்டுறவுச் சபையால் கூட்டுறவு மகளிர் அங்கத்தவர்களுக்கு என ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டு றவு, போசாக்கு, தலைமைத்துவம் அபிவிருத்தி தொடர்பான இருவாரப் பயிற்சிநெறியும் நல்லதொரு தொடக்கப் பள்ளியாக அமைந்திருந்தது. இப் பயிற்சியினூடாக கிளி நொச்சி மாவட் டத்தின் கூட்டுறவு அமைப்புக்களின் மகளிர் உறுப்பினர்கள் மாவட்ட மட் டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமது பல்நோக்குக் கூட்டுற வுச் சங்கங்கள் சிக்கன கடனுதவுக் கூட் டுறவுச் சங்கங்கள் ஊடாக உடனடி யாகவே தமது கிராமிய பிரதேச மட் டத்தில் கூட்டுறவு மகளிர் குழுக்களை அமைத்து பயிற்சிகளையும் நடை முறைத் திட்டங்களையும் செயற்ப டுத்த வேண்டும் என மாவட்ட கூட்டு றவுச் சபைத் தலைவர் உயர்திரு. சிறாசநாயகம் அவர்கள் வேண்டுகை விடுத்திருந்தார். இதனை நடை முறைப்படுத்தவேண்டியது சமூகப் பொறுப்புடைய கூட்டுறவாளர்களின் கடமையாகும்,

இதேபோன்று கடந்த வருடம் முதல் கிளிநொச்சி மாவட்டத்தில் 70 பாடசாலைகளில் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் இலைக்கஞ்சித் திட்டமும் போசாக்குத் தொடர்பான நல்லதொரு திட்டமாகும். இவற்றில் 43 பாடசாலைகளில் கிளி. மாவட்ட கூட்டுறவு ஒன்றியமும், ஏனையவற் றில் கியூடெக், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பனவும் நடைமுறைப்ப டுத்துகின்றன இவ்வாண்டு முதல் பாடசாலைகளில் தரம் ஆறும் இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது இத் திட்டம் தொடர்பான மேலதிக ஆய் வுள், பயிற்சிகள் என்பன மேற்கொள் ளப்படின் இத் திட்டம் மேலும் செழுமைபெற்று பயன் அதிகமாகும்

இதேபோன்று மனிதாபிமான அடிப்படையில் பணிபுரியும் நிறுவனங் களும், கிராமிய மட்டத்தில் எல்லோ ருக்கும் பயனளிக்கக் கூடியதான போசாக்கு விழிப்புணர்வு திட்டங் களை முன்னெடுத்தால் யுத்த கொடு ரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகவும் பயனளிக்கும்

சஞ்சிகா

இதனைப்பற்றி இந்த மண்ணில் மனிதாபிமானப்பணிபுரியும் சர்வதேச நிறுவனங்கள் புரிந்து கொள்ளாமலும் அக்கறையற்று இருத்தலும் வேதனைக்குரிய விடயங்களாகும் என்றும் மனிதாபிமானம் பற்றிய சர்வதேச அறிக்கைகள் உணவு தொடர்பான பாதுகாப்பின்மை என்பது போசாக் கின்மை அது தொடர்பான நோய் கள் மரணம் என்பவற்றை ஏற்படுத் தும் எனவும் மனிதாபிமான அடிப் படையில் அத்தியாவசியப் பணிபுரிப வர்கள் போசாகுன்மையால் ஏற்ப டும் தாக்கங்களைக்குறைத்து அதனை நீக்குதற்குரிய கடப்பாடுகளையும் எனவும் தெளிவுக்கிறது

கவிதை வெளி

வசந்தம் ஒரு நாள்

பூனை தூங்குது அங்கப்பிலே
பிள்ளை தூங்குது இங்கப்பிலே
என்னை இல்லை வீட்டுக்கிலே
என்ன நிலையடா வீட்டிலே
வசந்தம் வருமா வாழ்விலே
வாழ்க்கை போகுது தெருவிலே
இந்த நிலையா நாட்டிலே
இனி இருந்தென்ன வீட்டிலே
தூக்கிப் போடடா தோழிலே
துன்பமில்லடா நாட்டிலே.

ஜெபா
கரைச்சி மேற்கு

நன்றிகள் பற்பல

பொருளாதாரத் தடை போட்டார்
பெருமாட்டி சந்திரிக்கா
இருக்கின்றேன் நான் என்று
இறுமாப்புக் கொண்டு நின்றார்
நிவாரணம் இலையென்று
நீங்களெல்லாம் ஏங்காதீர்
இருக்கின்றேன் நான் என்று
நன்மை பல செய்து நின்றார்
நல்ல பணை மரத்தினார்
பழமாக கொடுக்கும்
பனம் பழத்தை தானெடுத்து
பணாட்டாக்கி விட்டதால்
பசி பறந்து ஓடும்
எனது கைவண்ண எம்மீதுள்ள
ஓலைகளை தானெடுத்து
பயிற்சி பெற்று
பனம் இழைத்திடுவீர்
கடைத்தெருவில் கொண்டு சென்று
கூவி விற்று வந்து
கூழெனினும் குடித்து நீங்கள்
நின்மதியாய் வாழ்ந்திடுவீர்

கா சசிகலா
261, கரியாலை நாகபடுவான்
பல்லவராயன் கட்டு.

"உன்னிடம் அடிபணிவோம்"

அன்று எம் தமிழ் இனம்
அன்பாக வாழ்ந்தது
பண்பான கூடுறவாக!
இன்று ஏன்
அது கலைகியே வாழ்வது
எதிரியின் வஞ்சனையால்!
நன்றாக வாழ்ந்த நாம்
என்றுமே இனி இங்கு
உன்னிடம் அடிபணிவோம்!

பி. வீ. கந்தசாமி
அக்கராயன் ப நோ. கூ.சங்கம்
அக்கராயன் குளம்.

"வந்தது தை"

மூட்டி விட்ட
கனிகை
முகில் சோட்டி
விட்ட நீராக
எட்டியெட்டிப்
பார்க்கும்
எச்சுமிடும் கதிரவன்
காலைக் கதிர்
கண்டு
நாணி நிறமும்
நெல் மகள்
முத்துமணி
முத்தம் தர
எத்தனை நாள்
காத்திருந்த — தை
திருநாள்
வந்ததென்று
இத் தரணியில்
பொங்கி நின்றார்
உழவரெனாம்

ஊற்றூர் தீரு

கெடுகுடி சொற்கேளாது!

எப்படித்தான் சொன்னாலும்,
உங்களுக்கு
ஏறுதில்லை புத்தியில்,
இதற்கு நாங்கள்
ஆனி என்ன செய்வது ?
நீங்கள் வரக் கூடாத இடம்
எங்கள் தமிழீழமென்று
எத்தனை தடவை சொன்னாலும்
அதைச் செவியில்
வாங்கிக் கொள்வதாக
நீங்கள் இல்லை
இனவாத மிடுக்குடனும்
எமை அழித்தொழிக்கும்
நோக்குடனும்
இங்கே வரத்தான்
செய்கின்றீர்கள்.
வந்து
களத்தில் பலியாகி
கால், கை வேறாகி
உயிர்த்துடிப்பு அடங்கியவராய்
உடல்
பொலிதீன் உறையில்
சுற்றப்பட்டு
போகின்றீர்கள்
உங்கள் பிறந்து வளர்ந்த ஊருக்கு.

அலெக்ஸ் பரந்தாமன்

வன்னி மண்ணும் கவிபாடும்

வானம் இருள்கிறது
வன்னி மடியினிலே
பாதை திறக்கவென
பூதம் வருகின்றது.
பேதம் பேசினிற்க
போதும் நேரமில்லை,
புலனாய் மாறு
பூதம் சாகும்
உன் பெருமையை
ஊர்பாடும்.
வன்னி மண்ணும்
கவிபாடும்

நீர்வைக்குமார்

பெய்யும் மெய்யும்

வெள்ளுடையும் கைப்புறாவும்
வேடமணிந்த வெண்தாமரையும்
ஐயகோ தானபலை பிதா
விழந்தோரணனை
லங்காபுரியின் தென்மேற்கில்
இனவாத ராணியின் அரங்கேற்றல
பாணும் பருப்பும் மலிந்து
நாடு நலமடையுமென
நம்மவரோடு நல்லுலகும் நம்ப
இவையெல்லாமே எனவாக
அகிம்சாவளிகையின் சாயம்
வெழுத்த
அந்தரங்கம் அம்பலமாகி
எதிர்பார்ப்புக்கள் பொய்த்துவிட
எம்தேச தலைவனின் வாக்கே
மெய்யாகிப் போனது

காவலூர்ச் செல்வம்

மூன்றெழுத்து

அவதரித்தோம் குழந்தைகளாய்
அவனி என்ற மூன்றெழுத்தில்
அறிந்தோம் முதன்முதலில்
அம்மா என்ற மூன்றெழுத்தை

அவருடன் இணைந்தெம்மை
அரவணைக்கும் உறவொன்று
அப்பா என்ற மூன்றெழுத்து

அன்பு என்ற மூன்றெழுத்தை
அடைய இனனும் பலவுறவு
அக்கா அண்ணா தம்பி தங்கை
அனைத்துமே மூன்றெழுத்து

அறிவு அது மூன்றெழுத்து
அதனைப் பெறும் பள்ளி
அது மூன்றெழுத்து

ஊக்கத்துடன் அறிவு சேர
அனைவரும் யாம் ஒன்றினைந்து
அறியும் கல்வி மூன்றெழுத்து

திருமதி கெ சியாமினி
மு/உடையார்கட்டு ம வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பூ மனேஜர்

முற்றத்தில் நின்ற நிழல் மர வள்ளியுடன் சைக்கிளைச் சாத்தி விட்டு முன்னால் இருந்த மண்ணுந்தில் அமர்ந்தபடியே சம்போ போதிதவில் இருந்த பற்பொடியை கையில் கொட்டி பல் விளக்க ஆரம்பித்தார் சிவசம்பர். ''இஞ்சேருங்கோ கெதியா முகத்தைக் கழுவிப்போட்டு தேதிதண்ணியக குடியுங்கோ'' அது குசினிக் குள் இருந்த லெட்சுமியின் குரல் அதிருந்தெழுந்தவர் முகம் கழுவி விட்டு தேநீர் அருந்துவதற்காக குசினிக்குள் சென்றமர லெட்சுமியும் தேநீரை நீட்டியவாறு 'நேற்றைக்கு ஈக்கத்து வீட்டு பாக்கியமக்காவுக்கு ஊரில இருந்து முத்தவனின்ர கடிதம் வந்ததாம் இப்ப கொஞ்சம் கஸ்ரமாம் கோயில் திருவிழாவும் ஆறு மணிக்கு முன்னரே முடிஞ்சிருமாம்'' அவள் சொல்லி விட்டு ஒரு பெரு மூச்சை வெளிவிட்டாள் அவளின் அந்தக்கால எண்ணங்களோடு இன்றைய நிலையை ஒப்புவித்து வெளி வந்த பெருமூச்சு அது தேநீரை அருந்திய சிவசம்புருக்கு கோயில் என்று மனைவி சொன்னபோதே வேதனை அதிகமாகியது

அந்த எழில்மிகு சிறிய கிராமத்தின் ஒவ்வொருவீட்டிலும்நடக்கும் நன்மை தீமைகளிலே முன்னிற்பவர் சிவசம்பரி கிராம அபிவிருத்திக்காகவும் கோயில் புனரமைப்பிற்காகவும் சிறுவயது முதல் தனது பொதுப்பணிக்காகவே அரிப்பணித்தவர் உயர்தர வகுப்பில் படிக்கும் போது கூட ஊர் சுற்றி திருவெம்பாவை பாடுவதும் பின்னர் பூசைகளில் கலந்து கொண்டு விட்டு பாடசாலைக்கு சிறிது பிந்திப்போய் ஆசிரியரிடம் அடிவாங்குவதும் அவருக்கு பழகிய விடயம் ஆலயத்தில் நடக்கும் பதினைந்து நாள் உற்சவதகல் பத்து நாளும் அதிகாலை 3 00 மணி வரை திருவிழா நடக்கும்.

கோயில் தலைவராக இருந்து ஆலய வளர்ச்சிக்காக பெரும்பாடுபட்டு கோயிவின் உள்வீதியின் மண்டபத்தை முழுமையாக கூரை போட்டு அத்தப் பெரும் வேலையை முடித்த நிம்மதியோடு ஆலய உற்சவத்திற்காக நாட்களை எண்ணிக்கொண்டிருந்தபோது சூரியக்கதிர் - 02 ன் ஊடாக இடம் பெயர்ந்து சாவகச்சேரிக்கு வந்து குடியமர்ந்தார்

தனது கிராமத்திற்கான சேவையை எவ்வாறு செய்தாரோ அதேபோன்று தனது கடமையூடாக நுகர்வோரை கவர்ந்து சம்பு மனேஜர் என்ற குட்டிப்பெயரை பெற்றுக் கொண்டார் ஒவ்வொரு நிலையிலும்

சிறுகதை

அதில் கலந்து கொண்டு பல கலை நிகழ்வுகளிலும் பங்குபற்றி விட்டு மறுநாள் வேலைக்கு சென்று தனது கடமையை சரிவரச் செய்து பழகியவர் தனது பிரதேச கூட்டுறவுச் சங்கத்தில் கிளை முகாமையாளராக வேலை கிடைத்த நான் தொட்டு மூன்னர் போல் பொதுப் பணிகளில் அவரால் முழுமையாக செயல்பட முடியா விட்டாலும் சனி. ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களிலும் பொதுப்பணியை மேற்கொண்டார்

அந்தக் கிராமத்தின் அனேகமான குட்டிச் சங்கங்களில் அவர் தலைவராகவோ செயலாளராகவோ இருந்து தனது ஊருக்கான தொண்டை ஆற்றி வந்தார்.

1995 ம் ஆண்டில் அந்த ஊர் அவரே மனேஜராக வரவேண்டும் என நுகர்வோர் விரும்பி சங்கத் தலைமையிடம் அவரின் பெயரை குறித்து கடிதம் எழுதி கையெழுத்துப்போட்டு அனுப்புவது வழமையாகவே அவருக்கு தலைமையிடமும் நல்ல அபிப்பிராயம் ஏற்பட ஏனைய கூட்டுறவாளர் மத்தியிலும் மரியாதைக்குரிய மனிதனாகவே திகழ்ந்தார்

சாவகச்சேரிக்கு அவருடைய சங்கமும் இடம்பெயர்ந்து வந்தது இடப்பெயர்ச்சி நேரம் தன்னுடைய சொந்த நலனுக்கு அப்பால் சங்க சொத்துக்களை காப்பாற்றும் பணியில் சண்டை நடக்கும் இடத்திற்கு அண்மைவரை சென்று சங்கப் பொருட்களை மீட்ட பணியாளர்களில் அவரே முதன்மையானவர்.

வலிகாமத்தை விட்டு இடம் பெயர்ந்த இலட்சக்கணக்கான மக்களோடு அவரது மனைவியும் மகளும் நடையாய் நடந்து வந்து கொடிகாமம் பாடசாலையில் இருந்த மக்களோடு சேர்ந்து அவர்களும் மூன்று நாட்களாக அங்கேயே இருக்க இரவு பகலாக சங்கத்தின் செயற்பாடுகளுக்காக செயற்பட்ட அவர் மூன்றாவது நாள்தான் தனது குடும்பத்தை தேடி அலைந்து அந்தப் பாடசாலையில் சந்தித்து லெட்சுமியிடம் நல்ல பேச்சும் வாங்கிக் கட்டிக்கொண்டார்

பின்பு பளைப்பகுதியில் ஒரு கொட்டில் போட்டு அதில் குடியேறிய குறுகிய நாளுக்குள் ஏற்பட்ட சூரியக்கதிர் - 02 ன் ஊடாக வன்னிப்பகுதிக்கு இடம்பெயர வேண்டி ஏற்பட்டது. இராணுவ நடவடிக்கையின் வேகம் பெரும் கடல் பகுதியூடாக தப்பிக்க வேண்டிய நேரம் அதோடு தங்களை வன்னிக்கு கொண்டு போகும்படி லெட்சுமியும் மகன் சென்பகமும் வைத்த ஒப்பாரி அவரை சங்கப்பக்கம் போக விடாமலே வன்னிக்கு வரவேண்டியேற்பட்டது

அவர் வந்தாரே தவிர அவருடைய சங்கம் ஊர்திருப்பி விட்டது. அதையே நம்பி வந்த மனுசன் என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடியபோது வாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த சிலசங்கங்கள் இயங்க ஆரம்பிக்க அதில் ஒன்றில் அவருக்கும் வேலை கிடைத்தது.

கூட்டுறவையே நம்பி வாழ்ந்த மனுஷனுக்கு கூட்டுறவு கைகொடுத்து நின்றதை நினைக்கத் தூண்டைடந்தார் உலகெங்கும் பரந்து பிரிந்து வழிகளிலும் சேவை புரிந்து வளர்ந்து நிற்கும் கூட்டுறவாளர்களை மத்தியில் ஓர் தொடர்பு இருக்குமெனில் அதுவே கூட்டுறவின் உயர்ந்த வளர்ச்சியாக அமையும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர்களில் அவரும் ஒருவர் அதனால் தான் லெட்சுமியின் சகோதரர்கள் வெளி நாட்டில் நின்று அவரை அழைத்த போதும் அவர் மறுத்துவிட்டு இந்த கூட்டுறவு சங்கத்தையே நம்பியிருந்தார்

அவருடைய இருபது வருட கால சேவையில் குறைந்த வேதனத்துடன் நிறைந்த சேவையை வழங்கும் கூட்டுறவில் தனது கிளையூடாக வந்த ஒரு பெரியளவிலான சோர்வுக்கு ஏற்படா வண்ணம் செயற்பட்ட தோடு ஊரில் அவருக்கு அந்தச் சம்பளத்தில் வாழக்கூடியதாய் இருந்தாலும் இன்று வாழ்க்கைச் செலவு கூடிய நிலையில் வெளிநாட்டில வதியும் அவரின் மைத்துனர்களின் தயவை நாடியே அவரின் வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது.

தேநீரை அருந்தி எழும்பியவர் கைக்கடிகாரத்தை எடுத்த நேரத்தை பார்த்தபோது மணி 7.45என்பதனிலும் அவசரமாய் உடைகளை மாற்றினார். ஊரில் என்றால் அரைப் பரப்புக் காணியில் கல்விடும் முற்றத்து மூலையில் தண்ணீர்க் கிணறும் வீட்டின் பின்னால் மலசலகூடமுமென அமைந்த வாழ்வுடத்தின் 7 மணிக்கு எழுந்தாலே அரைமணித்தியாலத்தில் எல்லா வேலைகளையும் முடிகித ஆறுதலாய் வேலைக்கு சென்றுவிடுவார் ஆனால் இன்று அதிகாலை 5 மணிக்கு எழும்பி ஒரு கட்டைக்கப்பால் காலைக்கடன் கழிப்பதற்காக காட்டுக்குச் சென்றுவிட்டு பின்னர் வீடுவந்து அரைக்கட்டைக்கப்பால் குளிக்கச் சென்றுவிட்டு பின்னர் நாலு வளவு தள்ளி குடிக்கிற தண்ணி எடுக்க சென்று இவ்வளவும் முடிய நேரமும் 8 மணியாய்ப் போயிடும். உடைகளை மாற்றிக்கொண்டு சாப்பிட அமர்ந்தார்

நாலாவது வளவில் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்த செம்பகம் தண்ணீர்க் குடத்தை வைத்துவிட்டு அவசர அவசரமாக வேலைக்கு வெளிக்கிட ஆரம்பித்தமாளாள். அப்பனுக்கு தப்பாமல் பிறந்த பிள்ளையென லெட்சுமியிடம் அடிக்கடி திட்டு வாங்கும் அவளுக்கு இருபதைகந்து வயதாகிறது. மாமனார் வெளிநாட்டில் மாப்பிள்ளை பார்த்து அவளிடம் சம்மதம் கேட்டபோது வெளி நாட்டு மாப்பிள்ளை வேண்டாமென மறுத்துவிட்டாள். ஒரேயொரு பிள்ளையாகையால் அவரும் செல்லம் கொடுத்து வளர்த்துவிட்டார் அதனால் அவளின் வாழ்க்கை பிரச்சினை தொடர்பான முடிவை எடுக்கும் பொறுப்பையும் அவளிடமே விட்டுவிட்டார் உயர்தர வகுப்பில் படித்துவிட்டு வீட்டில் இருக்கும் அவள் அயலில் உள்ள குடியிருப்பு ஒன்றிற்கு சென்று அங்குள்ள சிறார்களுக்கு இலவசக் கல்வி போதிப்பதும், கிராம சேவையாளர், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கான உதவி வேலைகளை செய்து கொடுப்பதுமே தனது கடமையாக கொண்டவள்: சிவசம்பரின் இரக்க குணம் அவளிடத்திலும் காணப்பட்டது.

சாப்பிட்டுவிட்டு எழுந்தவர் தன்னுடைய சிப் பைக்குள் படிவங்களையும், கடைத் திறப்பையும் வைத்து சைக்கிள் கரியரில் பையைவைத்தார்

கோவலூரான்

இலட்சுமி மீண்டும் முணுமுணுத்தாள் ''ஞாயிற்றுக் கிழமையாநாத்து எல்லாரும் வீட்டில நிண்டு ஒய்வெடுக்குதுகள் உங்களுக்கு இண்டைக்கும் கடை'' மரவள்ளியில் சாத்திய சைக்கிளை நிமிர்த்தியவர் மனதுக்குள் நினைத்துக்கொண்டார். இண்டைக்கு எல்லாக் கடையும் பூட்டிக் கிடக்கும் வயல் வேலைக்கும் வேறு கூலிவேலைக்கும் போனதுகள் 5 மணிக்கு இன்றைய சம்பளத்த வாங்கிக் கொண்டு அந்த காசிற்கு அரைகிலோ சோளமாவும், நூறுகிராம் சீனியும் வாங்க என்று பிளைக்கு தான் ஆவலோட வருங்கள் நானும் அதைப் பூட்டினால் அந்தச்சனம் என்ன செய்யிறது. அந்தச் சனத்திற்ற பிரச்சினையைச் சொல்லி அந்தச் சனத்திற் காகத் தானே ஞாயிற்றுக் கிழமை கடை திறக்க அனுமதி எடுத்து கடை திறக்கிறனான். இதுவெல்லாம் லெட்சுமிக்கு எப்ப விளங்கப்போகுது என நினைத்துக்கொண்டே ''போய்ற்று வாறன்'' என்று சொல்லிக்கொண்டு படலையைத் திறந்து சைக்கிளில் ஏறி மிதிக்கலானார்.

- முற்றும் -

சித்த மருத்துவ குறிப்புகள்

5 பித்த மயக்கம்

மலேரியாக் காய்ச்சலின் பின் ஏற்படும் வாந்தி, அலது தலைச்சுற்று என்வற்றால் ஏற்படும் களை நீர் முப்பு என்பனவற்றை நீடு செய்ய மருந்து

எலுமிச்சம் பழச்சாறு	25மி.மி
ஆறிய நீர்	200 ..
தேன்	5 தேக்கரண்டி

மூன்றையும் கலந்து இரண்டு பங்காக்கி ஒரு மணி நேரம் திற்கு ஒருமுறை அருந்தவும் பகல் வேளையில் நான்கு முறைகள் அருந்தலாம்.

2 நெற்பொரி	50g
பனங்கற்கண்டு	10g

இரண்டையும் நீரிற் கொதிக்க வைத்து தேன் கலந்து பருகலாம்.

6. வயிற்றுப்புண், குன்மம் வயிற்றுளைவு மூலநோய் திரச்சுரணம்

சுக்கு
திப்பிலிமூலம்
ஓமம்
மிளகு
சீரகம்
இந்துப்பு

} சமன்எடை

இடித்து சூரணித்து மூன்று வேளை அரை தேக்கரண்டி அளவு தேனில் அருந்த குணமாகும்

7. குழந்தைகள் உடல் பலத்திற்கு எளிய உணவு

செய்முறை

பெரிய சவ்வரிசி ஒரு புதிய மண் சட்டியில் போட்டு இளம் வறுவலாக வறுத்து எடுத்து நன்றாக பொடித்துக்கொள்ளவும் ஏல அரிசியையும் சீரகத்தையும் கழுவி மண்சட்டியில் போட்டு இளம் வறுவலாக வறுத்து இடித்துக் கொள்ளவும் மூன்றையும் கலந்து பதிரப்படுத்தவும்

பயன்படுத்தும் முறை

இரண்டு தேக்கரண்டி தூளை 400ml தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து தேவையான அளவு சீனி போட்டு குழந்தைகளுக்கு கொடுத்து வரவும்

வைத்தியர்
இந்துதயா சோதிதாசன்
A M.P Ind)
முருகானந்தா வைத்திய நிலையம்

8 வறட்டு இருமலுக்கு

சுக்கு	
மிளகு	
திப்பிலி	
அடுகொய்த்தோல்	25g
ஓமம்	
சித்தரத்தை	
அதிமதுரம்	

இவைகளை இடித்துச் சலித்து வைள்ளவும் ஒரு வேளைக்கு அரைத் தேக்கரண்டி மருந்தை இரண்டு தேக்கரண்டி தேனுடன் குழைத்து உண்ணவும் ஒரு நாளைக்கு 3 நேரம் ஐந்து நாட்களுக்கு மட்டும்

குறிப்பு:-

குளிர்ந்த பானங்கள் தயிர், கடலை வகைகள், மாமிச உணவு கண்டிப்பாக நீக்கவும்.

கூட்டுறவு பணியாளருக்கான

ஒருங்கிணைந்தபடி நிலுவைக் கொடுப்பனவு

கூட்டுறவு ஊழியர் நடைமுறைக் கோவை 97-96-10ம் திகதியிலும் சுற்று நிருபம் 32/97 97. 12. 18 ம் திகதியிலும் நடைமுறைக்குரியதாக இருந்த போதிலும் சுற்றுநிரூபம் 31/97 97.7 1ம் திகதியிலிருந்து நடைமுறைப் படுத்தப்பட்ட தரிசமைய ஒருங்கிணைந்த படியில் நிலுவையை வழங்குவதற்கு கூட்டுறவு ஆணைக்குழு (வ.கி) அனுமதி வழங்கியுள்ளது.

கூட்டுறவு பணியாளர்களுக்கான சம்பள மீளாய்வு சுற்று நிருபம் 31/97 இன் பிரகாரம் சம்பள மீளாய்வு இப் மாவட்டதில் 1998 ஜனவரி மாதத்தின் பின்னர் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களால் 1998 ஜனவரியின் பின்னர் 1.7.97ல் இருந்து நிலுவைச் சம்பளம் வழங்கி நடைமுறைப்படுத் தப்பட்டது.

இருந்தபோதிலும் இச் சம்பள மீளாய்வுக்குரிய பல மாதங்களில் கூட்டுறவுப் பணியாளர்கள் தமது ஒருங்கிணைந்த படியினை 165/88 சம்பள சுற்றுநிருபத்தின் படியே பெற்றுள்ளனர். இதன் பின்னான 32/97 சுற்று நிருபப்படி இணைந்தபடி கணிப்பீடு 31/97 சம்பள மீளாய்விற்கு அமைவாக கணிப்பீடு செய்யப்பெற்றமையால் கூ. பணியாளர் சிலர் கூடிய இணைந்த படியைப் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இவ்வாறு அதிகரித்து பொப்படகூடிய வித்தியாசத்தை 1997.7.1ம் திகதியிலிருந்து பெற்றுக் கொள்ள அனுமதிக்கு கிளி நொச்சி கூ. அ. உ ஆணையாளரால் 989.24ம் திகதியில் வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிடம் கோரியிருந்தமைக்கு அனுமதி

(4 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுக் கல்வி மேம்பாடே கூட்டுறவுமேம்பாட்டின் அடித்தளமாகும்

தனிமனிதனின் உயர்நிலையும். அதேவேளை சமுதாயத்தின் உயர்நிலையும் ஏற்படுத்தும் ஓரே நிறுவனம் கூட்டுறவே.

கூட்டுறவின் மேம்பாடு என்பது கூட்டுறவுக்கல்வியிலேயே தங்கியுள்ளது. எனவே நீங்கள் பெறும் பயிற்சியை கூட இறவின் அபிவிருத்திக்கும். உங்களுடைய உயர்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டும் என கிளி-மாவட்ட அரசாங்க அதிபரும். கிளி-மாவட்ட கூட்டுறவுச் சபைத்தலைவருமான திரு தி இராசநாயகம் தெரிவித்தார்

மாவட்ட கூட்டுறவுச் சபையின் கூட்டுறவுக்கல்லூரியின் புதிய பயிற்சிநெறி அங்குரார்ப்பண விழாவில் மேற்படி கருத்தைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில். நாம் தற்போது கூட்டுறவுப் பயிற்சியுடன் மட்டும் தனித்து நிற்காது எமது சமூக அபிவிருத்திக்கும் கூட்டுறவு அபிவிருத்திக்கும் உதவக்கூடிய பல்வேறுகல்வித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறோம். கூட்டுறவு மகளிர் குழு அபிவிருத்திக்காக தலைமைத்துவம், போசாக்கு, உணவு பதனிடல், போன்றவற்றையும் கனிஷ்ட பிரிவில் பயின்ற இளைஞர்களுக்காக புதுதலம் கட்டுநர் பயிற்சியையும் நடத்தியுள்ளோம். அதேபோன்று உயர்தர மாணவர்க்கும் கூட்டுறவுப் பணியாளருக்கும் கணனிப் பயிற்சியை இவ்வாண்டு வழங்கவுள்ளோம் அதே போன்று கூட்டுறவுத்துறையூடாக அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு பயிற்சிகளையும் நடத்த உள்ளோம் எமது மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் 48 மில்லியன் ரூபாய்களில் 42 மில்லியன் ரூபாய்கள் வங்கிகளில் நிரந்தர வைப்புகளில் இடப்பட்டுள்ளது. இவை பல்வேறு வகையான நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழும் சங்கங்களின் அங்கத்தவர்களின் விவசாய தொழில் முயற்சிகளுக்கு உடனாக வழங்கப்பட வேண்டும் இதன் மூலம் அவர்களின் மேம்பாட்டிற்கு உதவமுடியும் எனவும் தெரிவித்தார்

இந் நிகழ்வில் கலந்து கொண்ட கூட்டுறவுத் தினைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு பத்மானந்தன் பேசும் போது தெரிவித்ததாவது கூட்டுறவு அபிவிருத்தித் தினைக்களத்தின் விபரங்களின்படி இன்று வடக்கு-கிழக்குமாகாணத்தில் கிளிநொச்சி கூட்டுறவுக்கல்லூரியே பெறுபேறுகளுடன் முதற் படையிலும், எல்லாப்பயிற்சி நெறிகளையும் நடத்தும்நிலையிலும் உள்ளது எனவும் தெரிவித்தார்.

சிறப்புவிருந்தினராகக்கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் திரு. சொலமன் சு சிறில் பேசும் போது கூட்டுறவாளர்களுக்கு உயர்கல்விக்கான புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுவட்டக்கிளைகளுக்கு இம் மாவட்டத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட வேண்டும் என வும் இதன் மூலமே கூட்டுறவை வளர்த்துச் செல்லமுடியும் எனவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சங்கங்களின் பொது முகாமையாளர்கள் தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர். (அ.அ)

கரைச்சி தெற்கு ப, நோ கூ.ச பல்கலை - புலமைப்பரிசில் மாணவர்களுக்கு மாதாந்த உதவி

கிளிநொச்சி மாவட்ட ஒன்றியம் கரைச்சிதெற்கு ப நோ கூ.ச 22 மாணவர்களுக்கும். கரைச்சி கிழக்கு 3 மாணவர்களுக்கும், கரைச்சி வடக்கு 6 மாணவர்களுக்கும், அக்கராயன் 1 மாணவர்க்கும் மாதாந்த உதவி வழங்கவேண்டும் என கோரியுள்ளது.

சொந்த மண்ணிற்கு சேவை செய்வதே கைமாறாகும் - மாவட்ட வைத்திய அதிகாரி

பல்கலைக்கழக மாணவர்க்குப் புலமைப்பரிசில் வழங்குகிறீர்கள் கிளிநொச்சி மாவட்டத்திட ஒதுக்கீட்டில் அனுமதி பெறுகிறார்கள் ஆனால்தமது உயர் கல்வியை குறிப்பாக மருத்துவக்கல்வியை முடித்தவர்கள் இம் மண்ணிற்கு சேவை செய்ய முன் வராதது மிகுந்த கவலையளிக்கிறது குறைந்தது மூன்று வருடங்களாவது தமது சொந்த மண்ணிற்கு சேவை செய்வோம் என திட சங்கற்பம் பூணுவதே அவர்கள் இந்த மண்ணிற்கு செய்யும் கைமாறாகும் என கிளி மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி திரு விக்கினேஸ்வரன் கரைச்சி தெற்கு ப நோ கூ சங்க பரிசளிப்பு விழாவில் தெரிவித்தார்.

சங்கத் தலைவர் திரு. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவின் புலமைபரிசில், பல்கலைக்கழக மாணவர்க்கான மாதாந்த உதவி வழங்கலுடன் 1996 இடப்பெயர்வின் போது நெருக்கடியிலும் சங்க உடமைகளைப் பாதுகாத்த பணியாளருக்கும், பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன

நினைவஞ்சலி

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒய்வு பெற்ற உடற்கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒய்வுபெற்ற கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் அதிபருமான அமரர் ஜே எம் பீ. ஜெயராசா அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் கிளிநொச்சி ம. வி யில் அதிபர் திரு நடராசா தலைமையில் நடைபெற்றது

இக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு தி. இராசநாயகம் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு ப அரியரத்தினம். கிளிநொச்சி வெகுஜன ஒன்றியங்களின் தலைவர் சொன்வினாயகமூர்த்தி ஆகியோர் உட்பட ஆசிரியர் பழைய மாணவர் எனப் பலரும் உரையாற்றினர்

திரு ஜெயராசா அவர்கள் சென்னை வை. எம். சி. ஏ. உடற்பயிற்சிக் கல்லூரி டிப்புளோமா பட்டதாரியும், ஜிம்னாஸ்டிக் பயிற்சியில் இறப்புப் பயிற்சி பெற்றவருமாவர். இவர் அகில இலங்கை உடற்பயிற்சி குழுவில் அங்கம் வகித்தவரும். ஆசிரிய பயிற்சியாளர்களுக்கான போதனாசிரியருமாவர்.

மேலும் ஆசிரியர் நியமனம்?

இணைந்து நடாத்திய "தொழிற் சங்கத் தலைமைத்துவம்" எனும் கருத்தரங்கு வேளையே மேற்படி தகவல்கள் வெளியிடப்பட்டது

புதிய கல்விப் பணிப்பாளர்

கிளிநொச்சி மாவட்டத்தின் புதிய வலயக் கல்விப் பணிப்பாளராக திரு பசுபதி அரியரத்தினம் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியான இவர் ஓர் கூட்டுறவாளனுமாவார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரைசங்கமம் வாழ்த்தி நிற்கிறது.

யாழ் குடாவில் மட்டுப்படுத்தப்பட்ட மீன்பிடி எல்லை மீனவர் பாதிப்பு

யாழ் குடாக்கடல் ஏரியில் மட்டுப்படுத்தப்பட்ட கடல் பகுதியில் மீன்பிடித்தொழில் செய்வதற்கு மட்டுமே படையினரால் யாழ் மீனவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதால் போதுமான வருமானமின்றி அரை வயிறுப்பட்டினியுடன் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது என யாழ் மீனவர்கள் தெரிவித்துள்ளதாக கொழும்பு செய்திப் பத்திரிகையொன்று எழுதியுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட பகுதியில் பாதுகாப்புப் படையினரால் இவ்வப்பு நிறக்கொடிகள் மிதக்கவிடப்பட்டதாகவும் அந்த எல்லையைத் தாண்டுவோர் மறுநாள் தொழிலுக்கு செல்வது தடை செய்யப்படுவதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

(அ.அ)

முழுநிலாக் கலை விழா

புதுவருட தினத்தன்று கிளி நொச்சி இளைஞர் கலை இலக்கிய அவையினால் முழு நிலாக் கலை விழாவொன்று பரந்தன் இந்து ம.வி மண்டபத்தில் நடத்தப்பட்டது

திரு சோமசுந்தரலிங்கதன் தலைமையில் நடத்தப்பட்ட இந் நிகழ்வில் இயல்பு நிலை தவம்பியஒரு சூழலில் இருந்து கொண்ட மக்கள் சமூகம் ஆக இருப்பினும் அதன் இயக்கம் இளைஞர்களுடையதாக இருக்கிறது பல்வேறுபட்ட சுவை நயரீ தன்மையுடைய நவீன சமூகத்தில் இளைஞர்கள் பண்பாடு விழுமியங்களை கட்டியாளும் வகையில் சிந்திக்க அவைக்கிய அமைப்பையும் விழாவையும் நடாத்துவது மகிழ்ச்சியை ஒருங்கே வியப்பையும் தருகிறது, எனவே மாகந்தோறும் இப்பணி நிகழ்ந்து இவ்வமைப்பு வலிமை பொருந்திய இலக்கிய வல்லமைப்பாக திகழ புத்தாண்டில் வாழ்த்துகிறேன் என பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட வலயக் கல்விப்பணிப்பாளர் திரு பொன்சபாபதிகுறினார்,

சிறப்புவிருந்தினராக கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர திரு சூ சிறில் அவர்கள் பேசும்போது சேர. சோழ பாண்டிய மன்னர்களால் பாதுகாக்கப்பட்டு வலுவுப் பெருந்தகை முதல் தம் மண்ணில் தனிதாயக அடிகள் வரை பல்வேறு தமிழ திளர்களால் பாதுகாக்கப

கிராமிய வங்கிகளின் சமாசம்

கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம் ஒன்று அமைப்பதற்கான ஏற்பாட்டுக் கூட்டம் ஒன்று கிளிநொச்சி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. நா மூருகேசு தலைமையில் அவரது பணிமனையில் நடைபெற்றது. ப நோ கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர் பிரக்குனர் சபை உறப்பினர் பொது முகாமையாளர்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் இவ் வங்கிக்கான நடைமுறைகள். துணைவிதி என்பன ஆராயப்பட்டது. ஏழு பேர் கொண்ட தற்காலிக இயக்குனர் சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (அ-ஆ)

ஒருங்கிணைந்தபடி

அளிக்கப்பட்டுள்ளது என கிளிநொச்சி கூ.அ.உ. ஆணையாளர் அவர்கள் அறியத்தந்துள்ளார்கள்

உதாரணம்; 165188 சுற்றறிருப்பப்படி 12 சம்பளத் திட்டத்தில் 8851- அடிப்படைச் சம்பளமாக பெற்ற ஒருவர் இணைந்தபடியாக ரூபா 160/-ஐ மட்டும் பெற்றுக்கொள்ள முடியும் இவர் 31/97 சம்பள மீளாய்வு சுற்றறிருபமாக 17.97ல் இருந்து 1851- இணைந்தபடியைப் பெறமுடியும் சம்பள மீளாய்வு 1998 ஜனவரியில் மேற்கொள்ளப்பட்டபடியால் இப் பணியாளர் உயர்காலங்களில் ரூபா 160/-ஐ மட்டுமே பெறமுடியும் ஆனால் 31/97 இற்கு அமைவாக 97.7 ல் இருந்து இவர் நிலுவை இணைந்த பகுதியாக (185-160-25) பெற்றுக்கொள்ளமுடியும்.

6ம் ஆண்டு மாணவர்க்கும் இலைக்கஞ்சி

இவ் வருடம் முதல் மாணவர்க்கும் ஆறாந்தரத்து மாணவர்க்கும் இலைக்கஞ்சி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது

கிளி மாவட்டத்தில் உள்ள 73 பாடசாலைகளுள் 49 பாடசாலைகளுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியமும் னைவவற்றிற்கு மனித முன்னேற்ற நடுநிலையம் (கியூடெக்) தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பனவும் வழங்கி வருகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கராயன் ப.நோ.கூ. சங்கம்

திங்கள் ஓர் அறிமுகம்

அக்கராயன் எல்லைப் பரப்பானது கரைச்சி தெற்கு ப. நோ.கூ. சங்கத்துடன் இணைந்து இருந்தமையால் அசிசங்கத்தினால் பூரணமாக இப்பகுதி வாழ் மக்களுக்கு போரிக்கால சூழ்நிலையில் அடிப்படைத் தேவைகளை பூரணமாகசெயற்படுத்த முடியாமல் இருந்த காரணத்தால் வன்னேரிக்குளம், ஆனைமுழுந்தான் குளம், ஸ்கந்தபுரம், அக்கராயன் குளம், கோணாவில், கண்ணகைபுரம், ஊற்றுப்புலம், ஆகிய ஏழு கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய பிரதேசத்தில் உள்ள அங்கத்தவர்களுக்கு தனியான ஒரு ப. நோ. கூ. சங்கம் அமைக்கப்படும் போது தான் அவர்களுக்குரிய சேவையை முழுமையாக ஆற்ற முடியும் என்ற முற்போக்கு சிந்தனையுடன் திரு கா சாந்தலிங்கம் அவர்களின் தலைமையில் 18-11-92 ந் திகதி இப்பிரதேச வாழ் முன்னோடிகளை உள்ளடக்கியதான ஒரு அங்குரார்ப்பண கூட்டம் நடைபெற்றது. அங்குரார்ப்பண கூட்டத்தை தொடர்ந்து சங்கத்திற்கான இயக்குனர் சபை மகளிரை மேம்படுத்தும் நோக்கோடு இரு மகளிர் உறுப்பினர்கள் உள்ளடக்கியதாக ஒன்பது உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். சங்கத்தின் முதல் தலைவராக திரு ஆ சோமகந்தரம்பிள்ளை அவர்கள் தெரிவு செய்யப்பட்டார் இச்சங்கமானது 16-03-93ந் திகதி கூட்டுறவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாயினும் தனது செயற்பாட்டினை 28-06-93ம் திகதியே ஆரம்பித்தது

இச் சங்கம் ஆரம்பமாவதற்கு சகல ஒத்தாசைகளையும் அப்போதைய கிளி-மாவட்ட அரச அதிபராக இருந்த உயர்திரு. க. பொன்னம்பலம் அவர்களும் கூட்டுறவு அ. உ ஆணையாளராகிய திரு த. பஞ்சலிங்கம் அவர்களும் உதவி அரசாங்க அதிபராக இருந்த அமரர் செல்வி நா இந்துமதி அவர்களும் தங்களான முழு ஒத்துழைப்புக்களையும் வழங்கி செயலாற்றினர்.

இச்சங்கத்தில் 02 வது நெறியாளர் குழு 25-02-94 ல் தெரிவு செய்யப்பட்டு சங்கத்தலைவராக திரு சகிருஷ்ணபிள்ளை அவர்கள் தெரிவு செய்யப்பட்டார் தொடர்ந்து இதன் பின்னர் 25-10-97 ல் நடைபெற்ற நெறியாளர்குழு தெரிவிலும் சங்கத் தலைவராக திரு.ச கிருஷ்ணபிள்ளை அவர்களே தெரிவுசெய்யப்பட்டு இன்றுவரை செயற்பட்டு வருகின்றார்.

தொகுப்பு **ம. அ. புனிதராசா**
செயலாளர்

இச் சங்கம் கரைச்சி தெற்கு ப நோ. கூ சங்கத்திலிருந்து பிரிந்து செயற்பாட்டை ஆரம்பிக்கபோது அச்சங்கத்தில் இணைந்திருந்தமொத்த உறுப்பினர்களில் எமது குறிப்பில் உள்ள உறுப்பினர்களுக்கு தொகைக்கு ஏற்ப 15.468 என்ற வீதாசாரத்தில் சொத்துக்கள் பிரிக்கப்பட்டாலும் இச் சங்கம் மூப்பத்தெட்டு இலட்சம் ரூபா பொருள் இருப்புடனும் நான்கு இலட்சம் ரூபா பணத்துடனும் ஒரு பாரவூர்தியுடனுமே தனது செயற்பாட்டை ஆரம்பித்தது. இச் சங்க செயற்பாட்டுக்காக பணிதொகுதியாக பொதுமுகாமையாளராக திரு சி. இராமலிங்கம் அவர்களையும் அவருடன் அச்சங்கத்தில் பணி புரிந்த பதினாறு பணியாளர்களையும் இச் சங்கத்தின் ஆரம்பச் செயற்பாட்டுக்காக இணைக்கப்பட்டனர்.

ஆரம்பித்த நிதர்சனமே ஊற்றுப்புலம் பகுதியில் ஒரு கிளை நிலையத்தை திறந்ததுடன் மொத்தம் 07 கிளைக்குழுக்களுடன் தனது செயற்பாட்டை ஆரம்பித்து இதன் பின்னர் கண்ணகைபுரத்திலும், ஸ்கந்தபுரம் மேற்குப் பகுதியிலும் மேலும் இரு கிளை நிலையங்களை திறந்து கிளைக் குழுக்களை இணைத்து செயற்படுகின்றது மேற்குறித்த பகுதிகளின் கிளை நிலையங்கள் தவிர அக்கராயன், வன்னேரிக்குளம், கோணாவில் ஆகிய பகுதிகளில் மக்கள் கடைகளையும் திறந்ததுடன் ஸ்கந்தபுரம் பகுதியில் ஒரு நிவாரணக்கிளையையும் புடவை நிலையத்தையும் திறந்துசேவையினை விரிவுபடுத்தியுள்ளது

இச்சங்கம் தனது தலைமை செயலகத்தை அக்கராயன் கமநல சேவை நிலையத்தில் ஆரம்பித்தகாலம் காலப் போக்கில் தனக்கென ஒரு தனி செயலகத்தினை அக்கராயன்குளப் பகுதியில் நிறுவியதுடன் அப்பகுதியிலேயே ஒரு வெதுப்பக உற்பத்தி நிலையத்தையும் ஆரம்பித்துள்ளது அக்கராயன் பகுதியில் ஒரு அரிசியாலையுடன் இணைந்த காணி கட்டடத்தை வாங்கி இப்பகுதி வாழ் விவசாய மக்களின் நெல் கொள்வனவினை மேற்கொண்டு சேவையாற்றி வருகின்றது. சங்கம் தனது செயற்பாட்டுக்காக தற்போது மூன்று பாரவூர்தி களையும் இரண்டு உழவு இயந்திரங்களையும் ஒரு ஈ. எல். எவ் வானையும் பயன்படுத்தி சேவையாற்றுகின்றது சங்கம் அமைந்துள்ள பிரதேசத்தில் பெரும்பாலான மக்கள் விவசாய மக்களாகவே உள்ளனர் தற்போதைய போர்க்கால சூழ் நிலையில் இம்மக்களுக்கான விவசாய உள்ளீட்டுப் பொருட்களை பல சிரமத்தின் மத்தியில் கொண்டு வந்து விநியோகிப்பதுடன் வருடாந்தம் 60 உறுப்பினர்களுக்கு கால போக நெய்செய்கைக்கடன் திட்டம், மேட்டு நிலப்பயிர்ச்செய்கை உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கைக்கான கடன் திட்டங்களை செயற்படுத்தி அவர்களின் பொருளாதார அபிவிருத்திக்கு சேவையாற்றி வருவதுடன் போர்க்கால சூழ் நிலையில் பலதரப்பட்ட சேவைகளை மக்களுக்காற்றி வருவதுடன் இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு சகல தேவைகளையும் காலமறிந்து சேவையாற்றி வருகின்றது இச்சங்கம் தற்போது 1600க்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டதாகவும் தனியான மகளிர் குழு அமைப்பு ஒன்றையும் உருவாக்கியுள்ளது இம் மகளிர் குழு மூலம் தமது கிளைநிலையங்களில் விற்பனை செய்யக் கூடிய அளவில் அரிசி, மாவு, அவல் போன்ற பொருட்களை உற்பத்தி செய்து விற்பனைப்படுத்தி வருகின்றது பணிமனை பணியாளர்களுடனும் ஏழு கிளை நிலையங்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கம் தற்போது உறுப்பினர்களின் சேவையை மேலாக்கொண்டு ஒன்பது கிளை நிலையங்களையும் மூன்று மக்கள் கடையினையும், புடவை நிலையத்தையும் ஒரு வெதுப்பக உற்பத்தி நிலையத்தையும், ஒரு அரிசி ஆலையையும்தனது செயற்பாடாக கொண்டுதொண்ணூற்றைந்துபேரைக் கொண்டபணியாளர் தொகுதியுடன் சேவையாற்றி மேலும் தனது சேவைகளை விரிவுபடுத்தவுள்ளது

அரசு, தனியார் நிறுவன தொழிலாளர் போன்று அதிகரித்த சம்பளமும், தொழிற் பாதுகாப்பும் கூட்டுறவுப் பணியாளனுக்கும் வேண்டும்

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்க பணியாளர் திரு. சி. பாலசுப்பிரமணியம்

சீனைத்துலர பாகைப் பிரமணியம் இவிநொச்சிகனகபுரம் மூதலாம் பண்ணையைச் சேர்ந்த இவர் கடந்த 31 வருடங்களாக கனகபுரம் கரைச்சி தெற்குப் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் முகாமையாளராகக்கடமையாற்றியவர். ஒரு போதுமே சோர்வு ஏற்பட்டதனால் இடை நிறுத்தப்படும் நடவடிக்கை இலலாமல் எனது கடமையை கண்ணியமாக செய்தவர் என இவரின் சேவை பற்றி கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கத்தின் முகாமை மட்டத்தினர் தெரிவித்திருந்தனர் இவர் கடந்த வருட இறுதியுடன் ஓய்வுபெற்றுள்ளார் ஆனாலும் சங்கமத்தின் துணையாசிரியர் திரு அ அன்ரன் அன்பழகன் கரைச்சி தெற்குப் ப நோ கூ சங்கத்தலைமை அலுவலகத்தில் இச் சங்கமம் வெளியீட்டுக்கென செவ்வி கண்டுள்ளார்.

உங்களைப்பற்றிய அறிமுகத்தை சங்கம வாசகர்களுக்கு ஆளிப்பீர்களா?

★ கனகபுரம் முதலாம் பண்ணையில் வசிக்கும் நான் மாதகலைப்பிறப்பிடமாகக் கொண்டவன் இளமைக் காலத்தில் மாதகல் புனித ஜோசப் கல்லூரி, இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி ஆகியவற்றில் கற்று சிரேஸ்ட பாடசாலை தராதரம் பரீட்சைக்கு தோற்றினேன். அதன் பின் 1959 இல் யாழ் கூட்டுறவுக் கல்லூரியில் கூட்டுறவுப் பணியாளர் சாதாரணதரப் பயிற்சியை முடித்துக்கொண்டு மாதகல் ப. நோ. கூ. சங்கத்தில் இலிகிதராக ஒருவருடம் கடமையாற்றினேன் 1961இல் கனகபுரம் ப நோ. கூ. சங்கத்தில் முகாமையாளராகச் சேர்ந்து கடந்த வருடம் வரை பணியாற்றியுள்ளேன். எனக்கு இரண்டு ஆண்கள் இரண்டு பெண்கள் என நான்கு பிள்ளைகள் உள்ளனர்.

உங்களுடைய ஆரம்ப காலப் பணிகள் பற்றியும் அப்போதைய காலகட்டத்தில் சமூகம் மற்றும் கூட்டுறவின் கட்டமைப்பு பற்றியும் கூறுங்கள்.

அன்றைய காலகட்டத்தில் கூட்டுறவு அமைப்புக்கள் விசேடமாக கூட்டுறவுப்பண்டகசாலைகள்கிராமிய மட்டத்தையே தமது செயற்படு எல்லைகளைக் கொண்டிருந்தது இது ஒரு வகையில் கிராமிய மக்களுக்கானசேவைகளை நிகளவில் வழங்கக் கூடியதான வாய்ப்பினை கொண்டிருந்தது

கனகபுரம் படித்தவாலிபர் குடியேற்றத்திட்டம் அப்போதைய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் உயர் திரு சிறீகந்தராஜா அவர்களின மேற்பார்வையில் நடைபெற்றது. இக் குடியேற்றத்திட்டம் படித்த வாலிபர்களுக்கான கோழிப் பண்ணை திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலேயே உருவாக்கப்பட்டது, இதனால் கனகபுரம் கூட்டுறவுச் சங்கம் கோழித்தீவனவிநியோகம் மற்றும் பண்ணைக்காரரின் உற்பத்தியான கோழிமுட்டைகளுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்துதல் என்பவற்றையே பிரதான பணியாக கொண்டிருந்தது பண்ணைகளில் இருந்து பெறப்படும் கொள்ளப்பட்ட முட்டைகளை சந்தைப்படுத்தும் நிலைக்கமம் ஊடாக விற்பனை செய்யப்பட்டது படிப்படியாக கனகபுரம் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிகள் விற்பனை நெற் கொள்வனவு நுகர்வுப் பொருள் விநியோகம் என்பனவும் நடைமுறைப் படுத்தப்பட்டது. அப்போது கனகபுரத்நீட்டத்தின் அங்கத்தவர்களின் செயற்பாடுகளுக்கான சேவையே சங்கத்தின் பிரதான பணியாக இருந்தது

கனகபுரம் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளராக தாங்கள் எப்படிகரைச்சி தெற்குப் பணியாளராளீர்கள் அதனபின்னான உங்கள் சேவையைப் பற்றியும் கூறுங்கள்

★ கிராமிய மட்டத்தில் இயங்கிய கூட்டுறவுச் சங்கள் 1971 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கூட்டுறவு மறு சீரமைப்பினூடாக கனகபுரம், ஜெயந்திநகர், உருத்திரபுரம், கிளிநொச்சி மேற்கு கிளிநொச்சி, கிழக்கு வட்டக்கச்சி, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் சங்கங்கள் இணைக்கப்பட்டு கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கமாக மாற்றப்பட்டது நானும் முதலாம் கரகிளை முகாமையாளராக இணைக்கப்பட்டேன் இதன்பின் கனகபுரம் நுகர்ச்சிக் கிளை, இரணைமடு பசளைநிலையம் புடவை விற்பனை நிலையம் எரிபொருள் நிலையம், நெற்கொள்வனவு, இறம்பு நிலையம் ஆகியவற்றின் முகாமையாளராக இதுவரை கடமையாற்றியுள்ளேன் கற்போது இவ் வருடம் பதினாம் மாதம்வரை வேலை செய்யக் கூடியதாக இருந்தபோதும் உடல் நிலை காரணமாக கடந்த வருட இறுதியுடன் ஓய்வு பெற்றுள்ளேன்

தீண்ட கால அனுபவத்தினூடாக கூட்டுறவுத்துறை பற்றிய தாங்கள் புரிந்து கொண்டுள்ளவற்றை எமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுவீர்களா?

★ ஒரு கூட்டுறவுப் பணியாளனுக்கு முகாமைப்பணியாளர், தலைவர், நெறியாளர், அங்கத்தவர், வாடிக்கையாளர், கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகஸ்தர் என பலவேறு வகையான மேலாளர்கள் உள்ளனர் இவர்கள் அனைவருடனும் பேணப்படும் நல்ல முறையான உறவே எமது தொழிலின் வெற்றி யாகும் இதற்கு கண்ணியம், நேர்மை தொழில் மீதான விசுவாசம், மக்களுக்கான சேவை மனப்பாங்கு என்பன அடிப்படைத் தேவைகளாகும் என்னைப் பொறுத்தவரை இவற்றைச் சரியாகக் கைக் கொண்டேன் எனும் திருப்தி இருக்கிறது,

ஒரு கூட்டுறவுப் பணியாளன் என்ற வகையில் நாம் முகம் கொடுக்கும் பிரச்சனைகளைப் பற்றியும் இங்கு பேச விரும்புகின்றேன். அரச ஊழியர்களுக்கு நல்ல சம்பளமும், ஓய்வூதியமும் உண்டு ஒப்பீட்டளவில் ஒரு போது சேவையாளரைவிட, அரச திணைக்கள சிற்றூழியர்கள் அதிக சம்பளம் பெறும் நிலை காணப்படுகிறது தாட்டின் தனியார் துறையிலும் மிகக் கவர்ச்சிகரமான சம்பளங்கள் வழங்கப்படுகிறது ஒப்பீட்டளவில் எமது சங்கங்களின் அளவு மூலதனத்தை கொண்டிருக்கும் தனியார் நிறுவனங்களின் ஊழியர்களை எம்மை விட பலமடங்கு அதிகரித்த சம்பளத்தைப் பெறுகிறார்கள், எனவே ஒரு கூட்டுறவுப் பணியாளன் சேவை மனப்பாங்குடன் பணியாற்ற முன்வரவைக்கக் கூடியதாக கூட்டுறவுப் பணியாளனின் சம்பளத்திட்டம் மறுசீரமைக்கப்படுவதுடன். தொழில் ரீதியான பாதுகாப்புக்கான உத்தரவாதங்களும் அதிகரிக்கப்பட வேண்டும என நான் கருதுகிறேன்.

கூட்டுறவு நிறுவனம் அங்கத்தவர்களின் உடமை, அவர்களின் நன்மைக்காகவே ஏற்படுத்தப்பட்டது மக்களுக்கு சேவை செய்தல் என்பதே அதன் பிரதான கடப்பாடாகும் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொண்டு செயற்படின் உண்மையாகவே கூட்டுறவின் ஊடே நாட்டுயர்வு ஏற்படும் கூட்டுறவின் அத்திவாரம் அங்கத்தவர்கள் எனில் அதனைத் தாங்கி நிற்கும் கூரை கூட்டுறவுப் பணியாளனே என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என விரும்புகிறேன்,

பேரிணையம் பொதுக் கூட்டம்

வடமராட்சி தென்மராட்சி கூ. நிறுவனங்களின் பேரிணையத்தின் விசேட பொதுக் கூட்டம் 31.1.99 ஞாயிற்றுக்கிழமை தலைவர் ச. நற்குணம் தலைமையில் மல்லாவி தலைமைப் பணிமனையில் நடைபெறவிருக்கிறது.

லதா
நகைத் தொழிலகம்
அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
பொங்கல்
நல வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.
லதா நகைத் தொழிலகம்
மன்னார் வீதி, முழங்காவில்.
உரிமையாளர்:- சபா சண்முகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமம்
SANGAMAM

ஆறு 2 அருவி 5
கிளிநொச்சி, கிளிநொச்சி, ஜனவரி 1999

ஊழியர் நம்பிக்கை நிதி தரும் சலுகைகள்

E.T.F என்று சுருக்கமாக கூறப்படுவது ஊழியர் நம்பிக்கை நிதியாகும்.இந்நிதியை செலுத்துவதனால் ஏற்படும் சலுகைகள் பற்றி நாமறிந்த சில தகவல்கள்!

ஊழியர்கள் E T F சம்பந்தமாக தெளிவான தரவுகளை அறிய முடியாதிருப்பதால் இதனூடான சலுகைகளை அவர்களால் அனுபவிக்க முடியவில்லை என்பது உயர்ப் பான செய்தியாகும் E T F கட்டி விட்டால் வட்டியுடன் இளைப்பாறும் காலத்தில் மீளப் பெற்றுக் கொள்ளலாம் என்றே அனைவரும் எண்ணுகிறார்கள்

ஆனால் இதற்கு மேலாகவும் சில சலுகைகள் உண்டு என்ற தகவல்கள் எமக்கு எட்டியுள்ளன.

ஊழியர் ஒருவர் முழு அனவிலான ஊனமுற்றோராகி விட்டால் ரூபா 150,000 பெற்றுக்கொள்ள முடியும்.

சத்திர சிகிச்சைக்குள்ளாக நேரிட்டால் கோட்டை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆதார வைத்தியசாலையில் இலவசமாக சத்திரசிகிச்சையை மேற்கொள்ள முடியும்.

கண் பார்வைக் கோளாறு ஏற்பட்டால் கண்ணுக்கான விலைகள் போருதிவைதற்குரிய செலவினங்களை கோரி பெற்றுக்கொள்ள முடியும்.

5ம் ஆண்டு புலமைப் பரிசு பெற்ற ஊழியர்களின் பிள்ளைகள் தொடர்ந்து கல்வி கற்பதற்காக ரூபா 10,000/- பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறான சலுகைகளை ஊழியர்கள் முழுமையாக அனுபவிக்க வேண்டுமென்பதே எமது வெளிப்பாடு

கடின உழைப்பு மூலம் நீண்ட நெடும் பயணத்தை கடந்து வந்திருக்கும் நேரமிது

கடினமாக உழைக்கும் போது அதன் உரிமைகளையும் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும் அல்லாவிடின் எதிர், விளைவுகளை மட்டுமே சந்திக்க நேரிடும்.

இடப்பெயர்வு காரணமாக E T F தொடர்பான ஒருசில சலுகைகளைக் கூட பெற்றுக்கொள்ள முடியாமலிருப்பதாகவும் கூட்டிக்காட்டப்படுகிறது.

எனவே E T F தொடர்பிலான சலுகைகளை உரிய காலத்தில் கூட்டுறவு ஊழியர்கள் பெற்றுக்கொள்ள சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் உதவவேண்டுமென்பது பலரது கருத்தாகும்.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம் வெதுப்பகம் திறப்பு

மக்களின் தன்மை கருதி யில் திறந்து வைத்துள்ளது தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம். வெதுப்பகம் ஒன்றினையும் விற்பனவு நிலையமொன்றினையும் (கிளை) புளியம் பொக்கணை

மேற்படி சங்கத்தலைவர் கி. சாமுவேலும் அவர்களால் அணையில் திறந்து வைக்கப் பட்டது

சிறார்களுக்கு திட்டம்

குருகுலம் காந்திநிலையம் விடுதிச் சிறார்களின் எதிர் கால நலன்கருதி சேமிப்புத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப் பட்டுள்ளது. இச் சிறார்களுக்கு சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியில் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது இச்சிறார்களுக்கு உதவ விரும்புவோர் முழங்காவிலில் அமைந்துள்ள மேற்படி விடுதியுடன் தொடர்பு

பயிற்சியாளர் பயன் பெற்றனர்

கிளி மாவட்டத்தில் பனை அபிவிருத்திச்சபை ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் ரூபா 60,000 வீதம் 120,000 ரூபாவை பயிற்சியாளருக்கு வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளது.

சேமிப்பு அமுல்

கொண்டலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது

மார்கழிமாத

ஐக்கிய தீபம் வெளியீடு

யாழ் கூட்டுறவு சபையின் ஐக்கிய தீபம் மார்கழி வெளியீடு கூட்டுறவுப் பெரியார் அமரர் வி. வீரசிங்கம் அவர்களின் 34 வது ஆண்டு நினைவு தின சிறப்பு மலராக வெளிவந்துள்ளது

நெல்லின் விலை 700/-

நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள பயனாளிகளிடமிருந்து 1 மூடை நெல்லை ரூ 700/-க்கு குறையாமல் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது

கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்திற்கு புதிய நெறியாளர் குழு தெரிவு

கிருஸ்ணர் தில்லைநாதன் மீண்டும் தலைவரானார்

கரைச்சி கிழக்கு ப. நோ. கூ சங்கத்தினது பதினெட்டாவது பொதுக் கூட்டமும் நெறியாளர் குழு தேர்வும் கடந்த 98-12-28 ம் திகதி நடைபெற்றது கூட்டத்துக்கு கூ. அ. உதவி ஆணையாளர் திரு நா. முருகேசு தலைமைதாங்கி நடத்தினார்

இக் கூட்டத்துக்கு மூலனை மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

சங்கத்தின் நெறியாளர்குழு தேர்வு இடம் பெற்றதன் பின் வருவோர் நெறியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

திரு கிருஸ்ணர் தில்லைநாதன் - தலைவர்
திரு கணபதிப்பிள்ளை முகுந்துக்குமாரு உபதலைவர்
திரு பொன்னம்பலம் நித்தியானந்தம்
திரு சிவஞானம் சிறிதரன்
சண்முகநாதன்பாஸ்கரன்
திரு நாகலிங்கம் இராசசேகரன்
திரு. கந்தையா சிவசுப்பிரமணியம்

தலைவராக தெரிவான திரு. கிருஸ்ணர்தில்லைநாதன் இச்சங்கம் ஆரம்பிக்கப் பட்டதும் கூ. அ. உ. ஆணையாளரால் நியமிக்கப்பட்டு 98-1-1 லிருந்து செயற்பட்டு வருகின்றார் தொடர்ந்து இவரது சேவையும் ஏனைய நியமன நெறியாளர்களும்இச் சங்கத்தின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டு சங்கத்தினை வளர்த்தெடுத்துவந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்

கூட்டுறவுச் சேவையுடன் சமய சமூக சேவையிலும் ஈடுபாடு கொண்ட இவர் அரச சேவையில் 35 வருடங்கள் பணியாற்றி தற்போது இளைப்பாறி தொடர்ந்து சமய,சமூக கூட்டுறவுச்சேவையில் அர்ப்பணித்துவருவது மிகவும் பாராட்டுக்குரியது.

ஓட்டுசுட்டான் பனை தென்னை வள அ. கூ. சங்கம்

ஓட்டுசுட்டான் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் நிர்வாக இராணுவ நடவடிக்கை காரணமாக தனது சேவைகளை மேற்கொண்ட பிரதேசங்களிலிருந்து முற்றாக இடம்பெயர்ந்து பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது

இதனால் 225 அங்கத்தவர்களும் 37 பணியாளர்களும் தொழில் பாதிப்புக்குள்ளானதுடன் பல்வேறு நெருக்கடிகளுக்கா

மல்லாவியில் களஞ்சியம் திறக்க ஏற்பாடு

தெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் கறிட்சம களஞ்சிய விற்பனைச் சேவை நிலையமொன்றை மல்லாவி பிரதேசத்தில் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற கொண்டு வருகிறது

கூட்டு. சேவையில் 25வருடங்கள

சுன்னாகம் ப நோ. கூ சங்கத்தில் 25 வருடகாலத்துக்கு மேலாக சேவையாற்றியபணியாளர்களது சேவையைப் பாராட்டி சங்கத்தால் கௌரவிக்கப்பட்டார்கள்.

மனையியல் பயிற்சிநெறி

தென்மராட்சி கிழக்கு ப நோ கூ. சங்க மகளிர்களுக்கான மனையியல் அடிப்படை பயிற்சிநெறியின் நிறைவுவிழா கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் சங்கத் தலைவர் பொ. கனகராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

தொடர்பக பிராந்திய அலுவலகம் வவுனியாவில் திறக்க ஏற்பாடு

வவுனியாவில் தகவல் தொடர்பு பிராந்திய அலுவலகம் அமைத்து பிறமாவட்டங்களினூடான தொடர்புகளை வலுப்படுத்த பேரிணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது

மட்டக்களப்பு, திருமலை, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னாரமாவட்டங்களில் அமைந்துள்ள பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களுடனான தகவல் தொடர்பு பரிமாற்றங்களை ஒருங்கிணைப்பதற்காகவே வவுனியா நகர்ப்புகுதியில் தொடர்பக பிராந்தியஅலுவலகம் அமைப்பதற்கு வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி நிறுவனங்களின் பேரிணையம் தீர்மானித்தது என பேரிணையம் பொது முகாமையாளர் ஐ. சிவனேசன் தெரிவித்தார்

இது விரைவில் செயலுருப் பெற பேரிணையப் பணிப்பாளர் சபை துரித நடவடிக்கை எடுத்து வருகிறது

கருத்தரங்கு

புளியங்குளம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் தன் ஆளுமைக்குட்பட்ட பெரிய தாபனை, தவ்வி மூன்று மூறிப்பு பிரதேச அங்கத்தவாகளுக்கு 99 ம் ஆண்டுக்கான கருத்தரங்கு ஒன்று சங்கத்தலைவர் க. நற்குணம் தலைமையில் இரணை இலுப்பங்குளம் அ. த. க பாடசாலையில் நடைபெற்றது

வளப்பகிர்வுபற்றி கலந்துரையாடல்

கிளிநொச்சி மற்றும் விசுவமடு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டாக இணைந்து 1999ம் ஆண்டுக்கான எல்லைப்பிரதேச வளப் பகிர்வு பற்றிய கலந்துரையாடல் ஒன்றை வட்டக்கச்சி உபஅலுவலகத்தில் 11.01.99ல் நடாத்தியது

இக்கலந்துரையாடலில் இரு சங்கங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களும். அங்கத்தவர்களும் பங்குபற்றி தீர்மானங்களை எடுத்தனர்.

யாழ். கூட்டுறவு ஊழியர்கள் விசனம்

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட வன் செயல் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு வடபகுதிமீள் குடியேற்ற புனரமைப்பு அதி காரசபையின் நட்ட ஈடு வழங்கும் திட்டத்தில் இடமளிக்கப் படவில்லை

இதேவேளை அரச நிறுவனங்கள் ஊழியர்களுக்கு வழங்கப்படும் நட்ட ஈட்டுத்திட்டத்திலும் இணைத்துக்கொள்ளப் படவில்லை என தெரியவருகிறது

இவ்வாறான அரசின்செயற்பாடுகளினால் கூட்டுறவு ஊழியர்கள் பெரிதும் விசனமுற்றுள்ளார்கள் என யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன

பாதிப்பு கொடுப்பனவு

பாதிப்புக்குள்ளான 169 பனம் தொழில் வல்லுனர்களுக்கு வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்தி நிறுவனங்களின் பேரிணையம் பாதிப்பு கொடுப்பனவுகளை வழங்கியுள்ளது

குறுகிய காலப் பாதிப்பு 122 பேர். மத்திய காலப் பாதிப்பு 27 பேர் நீண்டகால நிரந்தரப் பாதிப்பு 5 பேர் சான்றிதழ்தோர் 8பேர். ஓய்வு பெறுவோர் 7. மொத்தமாக 169 பனந்தொழில் வல்லுனர்களுக்கு பாதிப்பு கொடுப்பனவாக 399 984 ரூபா 54 சதம் வழங்கப்பட்டுள்ளதாக பேரிணைய பொது முகாமையாளர் ஐ. சிவனேசன் தெரிவித்துள்ளார்

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் சார்பாக இப் பத்திரிகை கிளி மாவட்ட சித்தன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அச்சகத்தில் 1999ம் ஆண்டு ஜனவரி மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org